RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கல்கள்

ர. சரசு [அ] *, மா. ரமாதேவி [ஆ]

[அ] அரசு உயர்நிலைப் பள்ளி, குடுமியாண்டித் தோப்பு, சென்னை - 600 119, தமிழ்நாடு, இந்தியா.
[ஆ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை- 600 032, தமிழ்நாடு, இந்தியா.

# Economic Challenges Faced by Women in Rajam Krishnan's Short Stories

R. Sarasu [a, *], M. Ramadevi [b]

[a] Government Higher Secondary School, Kudumiyandi Thoppu, Chennai-600 119, Tamil Nadu, India.
[b] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai – 600 032, Tamil Nadu, India.

*Corresponding Author:

Received: 24-11-2025
Revised: 02-03-2026
Accepted: 11-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**
Literary works are closely connected with the social values, customs, and lived realities of the period in which they are created. Stories that reflect the beliefs and practices of a society have the power to influence both the intellect and emotions of their readers. From the earliest stages of civilization, human beings have been drawn to storytelling, and Tamil literature has preserved this tradition from the Sangam period to the present. Over time, the short story has undergone significant changes in both form and content, responding not only to the creative vision of individual writers but also to the changing social, cultural, and economic conditions of society. The evolution of the short story is shaped by historical circumstances and the needs of contemporary readers. As society changes, literary themes also evolve to address emerging issues and social realities. Among these, the economic hardships experienced by women have become an important concern in modern Tamil literature. Poverty, unemployment, unequal access to resources, financial dependency, wage discrimination, and the struggle for economic self-reliance are recurring themes that reveal the structural inequalities faced by women. Rajam Krishnan, a distinguished Tamil writer known for her realistic portrayal of marginalized communities, vividly depicts the economic challenges encountered by women in her short stories. Her narratives illustrate how financial insecurity influences women's personal lives, family relationships, education, employment, and social status. At the same time, her stories portray women's resilience, determination, and efforts to achieve economic independence despite the constraints imposed by poverty and patriarchal social structures. This article examines the economic problems faced by women in the short stories of Rajam Krishnan, analyzing how economic inequality shapes women's lives and identities. The study highlights the author's commitment to social realism and demonstrates how her works advocate women's empowerment, economic justice, and social equality through powerful literary representation.

**Keywords:** Women, Economical Issues, Sangam Period, Money, Redemption, Rajam Krishnan, Feminism, Feminist literature.

## முன்னுரை

ஒரு காலம் சமூகத்தின் கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் ஒட்டியும், வெட்டியும் அமைந்த கதைகள் அச்சமூக மக்களின் அறிவையும் அகத்தையும் தொடுவனவாக இருக்கும். மனிதன் பிறந்தது முதல் கதை கேட்க விரும்புகிறான். சங்ககாலம் முதல் இக்காலம் வரை சிறுகதைகள் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் பெரும் மாறுதலை அடைந்து வருகின்றன. இதற்குப் புறநிலைக்காரணிகளும் உள்ளன. கதை படைப்பாளரின் விருப்பத்தினால் மட்டும் மாறுதல் அடைவது

இல்லை, அக்காலச் சமூகத்தின் தேவையை ஒட்டி மக்களின் விருப்பத்தைச் சார்ந்து மாற்றமடைகிறது. கால மாற்றத்திற்கேற்ப மாறிவரும் சமூக விருப்பத்திற்கிணங்க கதை படைக்கப்படுகிறது. அவ்வகையில் ராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகளில் காணப்படும் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## பொருளாதாரமும் வாழ்வும்

குடும்பத்தின் அடிப்படை அலகுகளில் ஒன்று பொருளாதாரமாகும். பணம் இல்லையென்றால் எதுவுமில்லை. வாழ்க்கையின் எல்லா ஆதாரங்களும் தகர்ந்து போனாலும் பொருளாதாரம் மட்டும் நிலையாக இருந்ததென்றால் மற்ற ஆதாரங்களை ஓரளவு வளைத்துப் பிடித்துவிடலாம். பொருளாதாரச் சமத்துவம் இருந்துவிட்டால் வீடும் நாடும் உயரும்.

பணம் அல்லது பொருள் என்பது உலகின் பொதுச்சொத்து. மக்கள் அனைவரும் அனுபவிக்க உரிமையுள்ள சொத்தாகும். இந்தச் சொத்து தோற்றம் கொண்ட இடம் வீடாகும். வீட்டுக்கு உரியவள் பெண். பெண்தான் பொருளாதாரத்தின் ஆதாரம். ஆதித்தாய் எனக் கூறலாம். வீட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த பெண் தனது சக்திக்குட்பட்ட வகையிலெல்லாம் உதவுகிறாள்.

## பொருளாதாரச் சூழலை எதிர்கொள்வதில் பெண்கள் நிலை

சங்க காலத்தில் குறிஞ்சி நிலத்துப் பெண் தினைப்புனம் காக்கிறாள், கிழங்கு அகழ்கிறாள்; முல்லை நிலத்துப் பெண் ஆடு மாடு மேய்கிறாள், தயிர் விற்கிறாள்; மருத நிலத்துப் பெண் வயல் தொடர்புடைய வேலைகளையெல்லாம் செய்கிறாள், உழைப்புக்கேற்ற ஊதியம் காண்கிறாள்; நெய்தல் நிலத்துப் பரதப் பெண் மீன் விற்கிறாள், மீன் மீதமிருந்தால் உப்புப்போட்டு உலர்த்தி நாளைக்கு எனச் சேமிக்கும் உணர்வு பெறுகின்றாள்.

இவ்வாறு நிலத்திற்கேற்றப் பணி செய்து பொருள் சேர்க்கும் பெண்கள் வீட்டிலிருந்தவாறே வீட்டுப் பொருளாதாரத்தைச் சீர்செய்கின்றார்கள். இது அன்றைய சூழல். இன்றைய சூழ்நிலையில் பொருள் மிக அதிக மதிப்பு பெற்றதாக உள்ளது. அதற்குக் காரணம் மனிதனது தேவைகள் மிக அதிகமாகிவிட்டதே ஆகும். ஆண்கள் மட்டும் வெளியில் சென்று பொருள் ஈட்டுவது என்ற நிலை மாறி பெண்களும் சம்பாதிக்க வேண்டிய நிலை இன்றைய காலகட்டத்தில் உருவாகியுள்ளது. திருமணத்திற்காகப் பெண் தேடும் முயற்சியில் ஈடுபடும் மணமகன் வீட்டார் பெண்ணும் படித்தவளாக, வேலைக்குச் செல்பவளாக இருப்பின் நலம் என்று கருதுகின்றனர். கணவன் மனைவி இருவரும் கைநிறைய சம்பாதிக்கும் போது வீட்டுத் தேவைக்கான வசதிகள் கூடுகின்றன. பணப் பற்றாக்குறை குறைவதால் குடும்பச் சிக்கல்களும் குறைகின்றன.

## அல்லி கதாபாத்திரத்தின் சூழல்

இராஜம் கிருஷ்ணனின் அல்லி என்ற கதையில் வரும் அல்லி என்னும் பெண் கதாபாத்திரம் சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்த சூழலில் வேலைக்குச் சென்று சம்பாதிக்கிறாள். தன் அக்கா குடுப்பத்திற்கு உறுதுணையாகவும் இருக்கிறாள். திருமணத்திற்குப் பிறகு, அவளது கணவனுக்கு வேலை போய்விடுகிறது. அச்சூழலில் மாதம் எட்டு ரூபாய் சம்பளத்திற்கு வீட்டு வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காக்கின்றாள்.

“அல்லி, நீ சம்பாதிச்சு எனக்கு ஆக்கிப் போடுகிறியே! மனசு முள்ளாப்பிடுங்குது” என்று அவன் புழுங்குவதை அவள் தாளமாட்டாள். “இந்தா, இதானே வாணாங்கிறது! நீ வேறேயா?” நான் வேறயா? என்று அவள் வாயைப் பொத்துவாள். இவ்வாறு பெண்ணின் சம்பாதியத்தில் வாழ விருப்பம் இல்லாத தன் கணவனை அன்பால் மாற்றவும் முயல்கிறாள் அல்லி. அடுத்த ஒரு மாதத்தில் வரும் தீபாவளிக்குள் வேலை கிடைத்துவிட வேண்டுமென்று எண்ணுகிறான் அல்லியின் கணவன். இதற்கிடையில் அல்லிக்கு சாப்பாடும் போட்டு மாசம் பதினாறு ரூபாய் சம்பளத்திற்கு பதினைஞ்சு மைல் தாண்டி வேலைக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்கிறது. நல்ல சம்பளம் ஆனால், அவனைவிட்டு பிரிய வேண்டுமென்று வருந்துகிறாள்.

அல்லியின் மீது அளவில்லா அன்பு கொண்டு இருந்தாலும், அவளது உழைப்பில் வாழ்வதை அவள் கணவன் துளியும் விரும்பவில்லை. இதனை, “ஒரு பெண்பிள்ளை சம்பாதிச்சு ஆண் வாங்கிக்கிட வேண்டிய நிர்ப்பந்தம் வந்துள்ளது வச்சுக்க. அது அவன் மனசை கொடுவாளாய் வெட்டிடும்” என்று கூறுகிறாள் அல்லி. இக்கதையின் வழி தன் வீட்டுப் பொருளாதாரச் சூழலைச் சமாளிக்க முயலும் வேலைக்குச் செல்லக்கூடிய பெண், அவள் கணவனிடம் எதிர்கொள்ளக் கூடிய சிக்கல்களை வெளிப்படுத்துகிறது. இன்றைய நிலையிலும் பல பெண்கள் தனியே முயன்று, ஆணைவிட உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

## பார்வதி கதாபாத்திரத்தின் சூழல்

'விமோசனம்' என்னும் சிறுகதையில் வரும் பார்வதி என்னும் பெண் கதாபாத்திரம் சிறுவயதிலேயே தன் தந்தையை இழக்கிறாள். தன் சொந்த ஊரான கோணப்பட்டியைவிட்டு, தாய் அலமேலுவுடன் கோயம்புத்தூர் செல்கிறாள். அங்கேயொரு வக்கீல் வீட்டில் வேலை செய்து, அலமேலு தன் மகள் பார்வதியைப் படிக்க வைக்கிறாள். படித்து முடித்த பின் வீட்டில் வெறுமனே இருக்க வேண்டாமென்று பார்வதி வேலைக்குச் செல்கிறாள். அவளை ஆபீஸ் முதலாளி காதலிப்பதாகக் கூறி ஏமாற்றிவிடுகிறான். அவனால் குழந்தையைப் பெற்றெடுத்து, அக்குழந்தையை சாரதா மந்திரில் விட்டுவிட்டு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள் பார்வதி. அழகும் படிப்பும் அறிவும் நிரம்பிய பெண்கள் தங்கள் வீட்டின் பொருளாதாரச் சிக்கலைச் சமாளிக்க வேலைக்குச் செல்கின்றனர். அச்சூழலிலும் சில ஆண்களால் ஏமாற்றப்பட்டு, தன் உயிரையே மாய்த்துக் கொள்ளக் கூடிய நிலை பெண்களுக்கு ஏற்படுவதை இக்கதை சுட்டிக் காட்டுகிறது.

## சச்சு கதாபாத்திரத்தின் சூழல்

'ஒட்டுதல்' என்னும் சிறுகதையில் வரும் பெண் கதாபாத்திரம் சச்சு. பத்து வயது சிறுமி. அவளது தந்தை கண் பார்வை இழந்ததால் தாய் வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள். தன் கணவன் மற்றும் ஏழு குழந்தைகளைப் பாதுகாக்கும் பொருட்டு சச்சுவின் தாய் அலமேலு அல்லும்பகலும் உழைக்கிறாள். எவ்வளவு உழைத்து பணம் சேர்த்தாலும் அப்பெரும் குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. எனவே, சச்சுவை உதகைக்கு வேலைக்கு அனுப்புகிறாள்.

சாப்பாடு போட்டு மாசம் ஏழு ரூபாய் சம்பளம். ஆண்டுக்கு இரண்டு பாவாடை சட்டை என்று சொல்லி அம்புஜம் மாமி பிரேமாவிடம் சச்சுவை வேலைக்குச் சேர்க்கிறாள். உதகையில் சச்சுவுக்கு புறச்சூடும் இல்லை; அன்பான ஆதரவாகிய உட்சூடும் இல்லை. எனவே, சச்சு கறுத்துக் குன்றி அடையாளம் தெரிந்து கொள்ளவே ஊன்றிப் பார்க்கும்படி மாறிப் போனாள். இருப்பினும், தன் அம்மா கூறியபடி ஒட்டிக் கொண்டிருக்க முயன்றும், அவளால் அங்கு ஒட்டிக் கொண்டிருக்க முடியவில்லை. இறுதியில் தன் எஜமானியிடம் கூறாமலே சச்சு பணத்தை எடுத்துக் கொண்டு அம்மாவிடமே செல்கிறாள்.

இவ்வாறு பத்து வயதிலேயே தன் குடும்பத்தின் பொருளாதாரச் சிக்கலின் காரணமாக வேலைக்குச் சென்று பல்வேறு இன்னல்களை அனுபவித்த குழந்தையின் நிலையை இச்சிறுகதையில் இராஜம் கிருஷ்ணன் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## முடிவுரை

"சமுதாய அமைப்பின் பொருளுற்பத்திற்கு ஏற்ப மனிதனின் வாழ்நிலையும் அதைப் பிரதிபலிப்பதாய் உணர்வுநிலையும் இருக்கிறது." இக்கூற்றுக்கேற்ப பொருளாதாரம் என்பது மனிதனின் வாழ்க்கையிலும் அவ்வகையில் உணர்விலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இராஜம் கிருஷ்ணனின் நாவலில் வரும் பெண் கதாபாத்திரங்களின் நிலையும் பொருளாதாரச் சூழலுக்கேற்ப அவர்களது வாழ்க்கையிலும் உணர்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியதை இக்கட்டுரை வழி அறியப்படுகிறது.

## References

Rajam Krishnan, (2016) Rajam Krishnan Sirukathaigal, Gowra puththaga nilaiyam, Trichy.

Murugarathinam T, (1976) Puthumaipiththan Sirukathai Kalai, Sarvodaya Ilakkiya Pannai, Madurai.

Pasumaikumar, (2008) Tajmahalum Saaindhagopuramum, Arivu Pathippagam, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License